செய்தி வெளியீடு எண்.17/2021 நாள் 01.09.2021

**சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில் கடந்த இரண்டு நாட்களில் 7026 தெருக்களில் உள்ள 2 இலட்சத்து 81 ஆயிரத்து 747 குடியிப்புகளில் மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது**

சென்னை பெருநகர மாநகராட்சி பகுதிகளுக்குட்பட்ட நீர்நிலைகளை மேம்படுத்துவதற்காக மழைநீர் சேகரிப்பின் அவசியத்தை பொது மக்களுக்கு உணர்த்திடும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 30.08.2021 அன்று மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு பிரச்சாரங்கள் துவக்கி வைக்கப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நீர்நிலைகளை புனரமைக்கவும், நிலத்தடி நீர் மட்டத்தை அதிகரிக்க சுற்றுப்புறங்களை அழகுபடுத்தவும், நீர் நிலைகளில் சேமிப்புத் திறனும் நிலத்தடி நீர்மட்டமும் அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது. தனிநபர் மற்றும் சமுதாயக் கிணறுகள் மழைநீர் சேகரிக்கும் கட்டமைப்புகளாக கட்டமைக்கப்பட நடவடிக்கை உள்ளது. மேலும் சென்னை மாநகரிலுள்ள 10.94 இலட்சம் குடியிருப்புகளில் 8.24 இலட்சம் வீட்டு குடிநீர் இணைப்புகள் சென்னை குடிநீர் வாரியத்தால் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மழை நீர் சேகரிப்பின் விழிப்புணர்வினை பொது மக்களிடைய எளிதாக எடுத்துச் செல்லும் வகையில் விழிப்புணர்வு வாகனங்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கொடியசைத்து துவக்கி வைக்கப்பட்டது.

விழிப்புணர்வு பணிகளை மேற்கொள்வதற்காக 200 பணிமனைகளில் தலா 2 உதவி மையங்கள் வீதம் 400 உதவி மையங்கள் செயல்பட்டு வருகிறது. இம்மையங்களில் 2 ஆயிரத்துக்கு மேற்பட்ட மகளிர் சுயஉதவி குழுவினர் தண்ணீர் தன்னார்வலர்களாக (Water Volunteers) நியமிக்கப்பட்டு மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். பெருநகர

மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 35000 தெருக்களில் உள்ள 10 இலட்சத்து 91 ஆயிரம் குடியிருப்புகளுக்கு நேரடியாக சென்று விழிப்புணர்வு பணிகளை மேற்கொள்ள நடடிக்கை எடுக்கப்பட்டதின் அடிப்படையில் கடந்த இரண்டு நாட்களில் சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் 7026 தெருக்களில் உள்ள 2 இலட்சத்து 81 ஆயிரத்து 747 குடியிப்புகளில் மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பொது மக்களை நேரடியாக சந்திக்கும் தண்ணீர் தன்னார்வளர்கள் (Water Volunteers) மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ளும் போது குடியிருப்புகளின் தன்மை, கிணறு வகைகள், குடிநீர் இணைப்பு, கழிவுநீர் இணைப்பு, மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பின் விவரங்களை பொது மக்களுக்கு தெளிவுபடுத்தி குடிநீர் / கழிவுநீர் பற்றிய குறைகள் மற்றும் நீரில் உள்ள திடப்பொருட்களின் அளவு ஆகியவற்றை தெருக்கள் வாரியாக கேட்டறிந்து அறிக்கையினை சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு வழங்கி வருகிறார்கள். நிர்ணயக்கப்பட்டுள்ள கால அளவிற்குள் அனைத்து குடியிருப்புகளுக்கும் நேரடியாக சென்று மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு அவசியத்தை உணர்த்துவதோடு, வீடுகளில் பயன்படுத்த கூடிய நீரை சேமிப்பதால் ஏற்படக்கூடிய நன்மைகள் குறித்தும் பொது மக்களுக்கு உணர்த்தி மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு பணிகள் மேற்கொண்டுவருகிறார்கள்,

இக்களப்பணிகளளை காண்காணிப்பதற்காக மண்டலம் வாரியாக அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். பொது மக்கள் அனைவரும் விழிப்புணர்வு பணிகளை மேற்கொள்ள வருகை தரும் களப்பாணியாளர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கி சென்னை குடிநீர் வாரியத்தின் மூலம் மேற்கொள்ளும் மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு பணிகளுக்கு அனைத்து தரப்பினரும் உறுதுணையாக இருந்திட வேண்டுமென கோட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

வெளியீடு :

இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னை குடிநீர் வாரியம்